
# ஆயரின் ஆசி மடல்



*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர,*
*சகோதரிகளே,*

நம்மை எல்லாம் மீட்பதற்காக இந்த உலகத்தில் பிறந்து, கல்வாரி சிலுவையில், தன்னுடைய இரத்தத்தை எல்லாம் சிந்திய சிலுவைநாதர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

**இந்த மாதத்தின் வாக்குத்தத்த வசனம் "ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்"** (ஆதி. 26:12) என்ற வார்த்தையின்படி கர்த்தர் உங்கள் அனைவரையும் இந்த மாதத்தில் நூறு மடங்கு ஆசீர்வதிப்பாராக. மேலும் இந்த மாதம் லெந்து நாட்களின் துவக்கமாயிருக்கிறது.

லெந்துகாலம் ஆவிக்குரிய வாழ்வின் வசந்த காலங்கள். இயேசு கிறிஸ்துவின் சிலுவை பாடுகள், மரணம் ஆகியவற்றைக் குறித்து அதிகமாக சிந்திக்கும் நாட்கள். குறிப்பாக சிலுவையையும், சிலுவைநாதரின் அங்க மகத்துவங்களையும் தியானிக்கும் நாட்கள். எனவே இந்நாட்களில் சிலுவையை குறித்து ஒரு சிறிய சிந்தனையை உங்களுக்கு முன் வைக்க விரும்புகிறேன்.

சிலுவை, அழகுக்காகக் கழுத்தில் அணியும் ஆபரணமல்ல. இது கிறிஸ்தவ வாழ்வின் மையமான அன்பின் அடையாளம், தியாகத்தைச் சுட்டிக்காட்டும் தீபச்சுடர். அன்றாட மனித வாழ்விலே தொலைந்து கொண்டிருக்கும் மனிதத்தைத் தேடுவதற்கு மாதிரி காட்டுவது இந்த சிலுவை. அநீதிகள், அடிமைத்தனங்கள், ஆதிக்கவெறிகள், பிரிவினைகள், சமயவெறி (கொலோ. 1:20, எபே. 2:16) போன்ற சத்துருக்களை அகற்றவே இயேசு சிலுவையில் மரித்தார். எனவே திருச்சபை மக்களாகிய நாம் "சிலுவை அடையாளத்தினால் திருச்சபையை சத்துருக்களிடமிருந்து காப்பாற்றும்" என ஜெபிப்போம். சிலுவையைக் குறித்து 3 குறிப்புகளை லெந்து காலத்திற்குள் பிரவேசிக்கும் உங்களிடம் சுருக்கமாக பகிர்ந்து கொள்ளுகிறேன்.



## 1. ஒரு வாழ்வு

சிலுவை ஒரு சின்னம் அல்ல, அது ஒரு வாழ்வு. இந்த வாழ்வு சிதைந்து போன உறவுகளையும், மனித நேயத்தையும் போராடிப் பெறும் வாழ்வு. எங்கு எல்லாம் மனித உறவுகள், உரிமைகள் மறுக்கப்படுகிறதோ அங்கு எல்லாம் சிலுவை பாதையில் (போராடி) வெற்றி பெறும் வாழ்வு. இயேசுகிறிஸ்துவின் வாழ்வும் (மாற்கு 10:45) சீஷர்களின் வாழ்வும் (லூக்கா 4:27) புனித பவுலடியாரின் வாழ்வும் (பிலி 1:21) ஆதித்திருச்சபையினரின் வாழ்வும் (1பேதுரு 1:6) அருள் தொண்டர்களின் வாழ்வும் சிலுவையின் வாழ்வே. அதேபோல் ஊழியத்தின் பாதையிலும் கிறிஸ்தவ விசுவாச வாழ்விலும் பல சிலுவைகள் (பாடுகள்) உண்டு. அவைகளை எல்லாம் கண்டு மனம் வருந்தாமலும், விசுவாசத்தை விட்டுவிடாமலும் ஆண்டவருக்காக இந்த லெந்து காலத்தில் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

*சிந்தனைக்கு:* **சிலுவை வாழ்வு மனசாட்சியை மழுங்கடிப்பதல்ல; மனம் மாறி புது மனிதனாவது.**

## 2. ஒரு சவால்

பணம், பலம், அதிகாரம் இவற்றை காட்டி தங்களை அசைக்க முடியாது என்ற ஆணவத்தில் பிற மக்களுடைய உணர்வுகளை மதிக்காமல் உரிமைகளை பறிக்கும் மனிதர்களுக்கு இது ஒரு சவால். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் அன்னா, காய்பா, பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள் ஏன் அந்த நாட்களில் சமயத்திலும், சமுதாயத்திலும் மக்களை ஒடுக்கி சுரண்டிய அத்தனை பேருக்கும் ஒரு சவாலாக அமைந்தது. அவர்களை எதிர்த்து இயேசுகிறிஸ்து சிலுவையில் வெற்றி சிறந்தார். எனவே நாமும் சிலுவையை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு சிலுவை நாதருககு நம்மை இந்த லெந்து காலத்தில் அர்ப்பணிப்போம்.

*சிந்தனைக்கு:* **சிலுவை வாழ்வு தீமைகளை மறைப்பது அல்ல; அவற்றை மாற்றுவது.**

## 3. ஒரு பயணம்

சிலுவை பயணம் சமுதாயத்தில் காணப்படும் தீமைகளால் கெத்சமனேத் தோட்டங்களாக மாறிவரும் மக்களது வாழ்வில் மகிழ்ச்சிப் பூங்காவை உருவாக்கப் புறப்பட்ட ஒரு புனித பயணம். இயேசுவின் சிலுவைப் பயணம் பாவிகளுக்கும், ஆயக்காரர்களுக்

கும், பார்வையற்றவர்களுக்கும், நடக்கமுடியாதவர்களுக்கும், புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும், பெண்கள், சிறுவர்கள் மற்றும் அடிமைத்தன வாழ்வில் வாழும் யாவருக்கும் மகிழ்ச்சியை தந்தது. நாமும் இந்த லெந்து காலங்களில் சிலுவை பயணத்திற்கு நம்மை அர்ப்பணித்து மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுப்போம்

*சிந்தனைக்கு :* **சிலுவை வாழ்வு சிறிது காலம் தொடரும் பயணமல்ல; உயிரிருக்கும் வரை தொடரும் பயணம்**

**முடிவுரை :**

சிலுவையின் நோக்கத்தை நான் உங்களுடன் தெளிவாகப் பகிர்ந்து கொண்டுள்ளேன். இந்த சிலுவை வாழ்வு எந்த அளவில் நம் வாழ்வில் உள்ளது என்று இந்த லெந்து காலத்தில் நம்மை நாமே சிந்தித்து சீர்தூக்கிப் பார்ப்போம். லெந்து காலத்தில் கர்த்தர் நம்மை ஆவிக்குரிய, உலகப் பிரகாரமான சகல ஆசீர்வாதங்களிலும் ஆசீர்வதிப்பாராக.

*சிந்தனைக்கு :* **சிலுவை வாழ்வு இறப்பில் முடிவதல்ல; அது அன்பின் புதுபிறப்பு**

*சிலுவைநாதரின் திருப்பணியில்,*

**Rev. R.A.J. செல்வின்துரை**

## லெந்துகால கன்வென்ஷன் செய்தியாளர்கள் 2023

| | |
|---|---|
| பிப் 22 | சகோ. **பிரபாகரன் பெனடிக்ட்,** தூத்துக்குடி |
| பிப் 25,26 | சகோ. **கரிஷ்மா ஜெபக்குமார்,** தூத்துக்குடி |
| மார்ச் 4,5 | **அருள்திரு. டேவிட்,** கோயம்புத்தூர் |
| மார்ச் 11,12 | அருள்திரு. **குணகுமார்,** சென்னை |
| மார்ச் 18,19 | சகோ. **ராஜன்** I.R.S., சென்னை |
| மார்ச் 25,26 | சகோதரி. **சகுந்தலா அசரியா,** ஆலங்குளம் |
| ஏப்ரல் 1, 2 | சகோ. K. **பட்டுராஜ் செல்வன்,** தூத்துக்குடி |
| ஏப்ரல் 3,4,5 | சகோ. J. **இம்மானுவேல் கோயில்ராஜ்,** அந்தமான் |
| ஏப்ரல் 9 | சகோ. J. **ஜெகத் ரட்சகர் இன்னிசை குழு,** சண்முகபுரம் |



CSI - TND தூத்துக்குடி சேகரம்

# தூய பேட்ரிக் இணை பேராலயம்

வடக்கூர், தூத்துக்குடி

# சேர்ப்புக்கால பண்டிகை 2023

**12.02.2023 ஞாயிற்றுக்கிழமை**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற 12.2.2023 ஞாயிறு அன்று சேர்ப்புக்கால காணிக்கை மற்றும் ஆண்டவர் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து குடும்பமாக நன்றி செலுத்தும் குடும்ப ஆசீர்வாத பண்டிகையாக நாம் ஆசரிக்க இருக்கிறோம். இந்தப் பண்டிகையை நாம் ஆசரிக்க வேண்டியது நம் கடமை என வேதம் சொல்கிறது.

ஆகையால் 12.2.2023 அன்று நம் கரங்களில் கொடுக்கப்பட்டுள்ள குடும்ப ஆசீர்வாத பண்டிகை ஸ்தோத்திர காணிக்கை கவரை, நாம் ஒவ்வொருவரும் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபர்களின் பெயர்களுக்கும் காணிக்கை செலுத்தி, தேவ சந்நிதியில் குடும்பம் குடும்பமாக படைக்க கேட்டுக் கொள்கிறோம்.


சேர்ப்புக்கால பண்டிகையின் பிரதான மற்றொரு நோக்கம் நாம் அனைவரும் விளை பொருட்கள், பலகாரங்கள், பழங்கள், காய்கறிகளை உற்சாகமாக தேவசந்நிதியில் குடும்பமாக அனைவரும் படைக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

சேர்ப்புக்கால பண்டிகைக்கு படைக்கப்பட்டிருக்கிற அனைத்து வகையான பொருட்களையும் யாவரும் குடும்பம் குடும்பமாக உற்சாகமாய் ஏலம் எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் பொருத்தனையாகவும் காணிக்கை

செலுத்தி ஆசீர்வாத தட்டை பெற்றுக் கொள்ளவும் கேட்டுக்கொள்கிறோம்.

## ஞாயிறு காலை ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| காலை 7.00 மணி | பண்டிகை ஆராதனை |
| காலை 8.30 மணி | சபையார் படைத்து இருக்கும் ஆசீர்வாத பொருட்கள் ஏலம் விடப்படும். |
| மாலை 6.30 மணி | துதி ஆராதனை |



## பிறந்தநாள் ஆசரிப்பவர்கள்

**பிப்ரவரி 1**

செல்வன். யாக்னா
திருமதி. P.M. சோனி

**பிப்ரவரி 2**

திரு. J.P. தியாகராஜன்
செல்வன். J. ஆரோன்
திருமதி. J. விஜயகுமாரி
செல்வி. E. ஏஞ்சலின் ரேச்சல்
திரு. D. கோயில்ராஜ்
திருமதி. R. தெபோரா பாக்கியராணி
திரு. ஞானதாஸ்
திரு. R. ஆண்ட்ரூ ஜெபக்குமார்
திரு. P. டேவிட் சந்திரபோஸ்
திரு. D. ஆசீர் துரைராஜ்
திருமதி. A. லதா
திரு. K. ஸ்டீபன்

**பிப்ரவரி 3**

செல்வன் P. ஜோயல் ஜோசுவா
செல்வன். J. திஷோன்
செல்வன் A. சாம் பிரவீன்குமார்
திருமதி. ரெஜினா சினித்
திரு. T. ஜெயசிங்
திருமதி. S. இந்திரா
பேபி. K. டியாரா ஏஞ்சலின்
பேபி. தியாகரன் சகரியா விஜேஷ்
செல்வன். S. ஸ்டான்லி பால்
திருமதி. A. அகஸ்டா அருள்மேரி

**பிப்ரவரி 4**

திரு. M. ராஜமாணிக்கம்
செல்வன். S. இம்மானுவேல்
திரு. R. இருதய ராஜ்
மாஸ்டர். A. ஜோஷ் பெகாஷா
திருமதி. G. பிரேமா
திருமதி. K. மதுநிகா
திரு. ஜூலியஸ்



திரு. A. ஞானராஜ்

**பிப்ரவரி 5**

திருமதி. M. ஆனி சுந்தரி
திருமதி. W. பெட்டில்டா ஆஷா ராஜகுமாரி
திருமதி. M. எல்ஸி பேபி
திருமதி. J. வசந்தா
திருமதி. G. அந்தோனி சமாதான கமலம்
திருமதி. ஷீபா
திருமதி. K. மெகிதா செல்வராணி
திருமதி. சில்வியா பிரபு
Dr. P. விமலா பால்
திருமதி. R. திவ்யா

**பிப்ரவரி 6**

திரு. R. பால் சுதாகரன்
திருமதி. S. கிறிஸ்டி
செல்வன். D. ஜேஸ்பர் பெர்ல்சன் செல்வகுமார்
செல்வன். S. தீன தயாளன்
பேபி. S. லாசரஸ் சீயோன்
செல்வன் K. ஆல்வின் சாம்ராஜ்
திரு. S. டேவிட் நாராயணன்
திருமதி. D. மெர்லின் சுகந்தா
செல்வன். C. கேபன் கர்னி
திருமதி. A. கருணா
திருமதி. R. செல்வி
செல்வி. I. ஜேஸ்லின் ஜாய்
செல்வன். P. ஜோவின் மேஷாக்

**பிப்ரவரி 7**

திருமதி. I. பாக்கியராணி
திரு. R. தேவப்பிரியம் ராஜமதுரம்
திரு. P.S. மரியதாஸ் ஜான்சன்
திருமதி. E. மிஸ்பா ஜார்ஜினா
செல்வி. V. அல்ஃபினா
செல்வி. E. சப்ரினா

**பிப்ரவரி 8**

திருமதி. S.J. கிரேனாப் சுகந்தராஜ்
திருமதி. A. மஞ்சு ஷெரின் சாத்ராக்
திரு. பிரபாகர் செல்வராஜ்
திருமதி. S. தேவபாலா கிருபை மேரி
செல்வன். E. சாமுவேல் பெஞ்சமின்

**பிப்ரவரி 9**

செல்வி. S. ஜெனிஷா எஸ்தர்
திரு. J. தாமஸ் பொன்னையா
திரு. J. டேவிட்
செல்வி. J. கீர்த்தனா ஹெப்லின்
திருமதி. E. பாக்கிய மாலதி
திருமதி. பிரமிளா பிரின்ஸ்
திருமதி. M. திவ்யா சஃபையர்
திரு. C. துரைசிங் ஆபிரகாம்
திருமதி. B. டினா
திருமதி. P. ஜெஸிந்தா
திரு. I. அந்தோணிராஜ்
திருமதி. D.N. உமா மகேஷ்வரி
திரு. S.D.R. விஜயசீலன்
திரு. P. பொன்ராஜ்

**பிப்ரவரி 10**

திரு. E. சாமுவேல் செல்வராஜ்
திருமதி. S. ஏஞ்சலா லின்சி
திருமதி. P. தமிழ்செல்வி
திருமதி. K. சுதா
செல்வி. M. மேபல் பிரின்ஸியா
திருமதி. S. அன்னபாக்கியம்

**பிப்ரவரி 11**

திரு. D. பாண்டியன்
திருமதி. J. எஸ்தர்ராணி
திரு. M. மெல்வின் டேவிட்
திரு. P. சாம் ராஜ்
திரு. முகில்
செல்வி. ஷேபா வின்ஸ்லின்
திரு. R. பிரபாகரன் பால்
திரு. P. மனுவேல் பிரசாந்த் குமார்

திருமதி. J. நளினா நவரோஜ்

செல்வி. E. ஜேன் ஷேரன்

**பிப்ரவரி 12**

செல்வி. D. லெஸ்லி

செல்வி. ஜுவன்டா

திருமதி. P. பெல்சியா ஸ்டெபி ஜாண்சிராணி

செல்வி. A. பூனம் பிரஜிதா

திருமதி. V. முகிலா

மாஸ்டர். J. ஜோன்சன் ஜேக்கப்

திருமதி. கஸ்தூரி தமிழரசன்

செல்வி. A. இஷாலினி ஜெயசீலி

செல்வி. J. பெனிட்டா கிரேஸ்

செல்வி. E. ஜோகன்னா டாரதி

திரு. P. ஜார்ஜ்

**பிப்ரவரி 13**

செல்வன் A. அலெக்ஸ் டேனியல்ராஜ்

செல்வன் J. லார்சன் ஜேக்கப்

திருமதி. G.V. ஹெலன் விக்டர்

திருமதி. விஜயராணி

செல்வன். J. ஜோயல் பிளஸ்ஸிங்

செல்வன். M. மெட்ரிக் ரெனாட்ஸ்

செல்வி. D. மரிய பிரிட்டி ஷாலினி

திருமதி. V. ஷர்மி சல்வா லின்சி

**பிப்ரவரி 14**

செல்வன். N. நிக்சன் இஸ்ரவேல்

திருமதி. S. மரிய பெல்ஷியா

செல்வன். P. ஆரோன் டேனியல்ராஜ்

செல்வி. M.B. ஜெமிமா ஷெர்லி

திருமதி. ஏஞ்சலின் கிறிஸ்டி ரீகன்

செல்வி. டோரின் அமேதா

**பிப்ரவரி 15**

திருமதி. H. வெல்வெட் கெட்சிமா

செல்வி. R. அபிஷா

செல்வன். J. ஜெர்ஷன் செல்வராஜ்

செல்வி. D. ஆஷரிட்டா கரன்

செல்வி. S. குளோரி ஆண்ட்ரியா பெரில்

திருமதி. D. பிச்சைமணி

செல்வன். A. ஜெரோம்

திருமதி. V. ரூபினா வசந்த்

மாஸ்டர் J. ஜோனஸ் ரிஜோ ஆசீர்

திருமதி. H. வயலட் ஜெமிமா

**பிப்ரவரி 16**

திருமதி. S. விக்டோரியா

திருமதி. E. வனிதா

செல்வன். N. பெனிஷ்

செல்வி. S. ஜியோனா

செல்வி. S. ஜோனா ஜெயசீலி

செல்வி. A. லிடியா

திரு. G.S. ஜேக்கப்

திரு. G.S. ஏசா

திரு. K. ஜோசப் மூர்த்தி

திருமதி. எஸ்தர் ரூபி

செல்வன். G. ஹேரிஸ் வில்லியம்

செல்வன். J. பெனாயா

**பிப்ரவரி 17**

திரு. D. சுகேஷ் சாமுவேல்

Dr. சிந்தியா பிரின்ஸ்

திருமதி. விக்டோரியா

செல்வன். P. அனுப் சரண்குமார்

திருமதி. S. பத்மா

செல்வன். D. டேனிஷ்

செல்வி. A. ராகேல்

**பிப்ரவரி 18**

செல்வி. J. ஹெலினா ஏஞ்சல்

செல்வி. திவோரா ஜெம் கெட்டி

செல்வன். K. ரோஹித் பொன்சன்



திரு. S. தேவராஜ்

திருமதி. G. ஜெபராணி

திரு. J. ஜெபமணி ஜோசப்

திரு. M. புருசோத்தமன்

செல்வன். J. ஜோயல் ஸ்டட்

**பிப்ரவரி 19**

திருமதி. A. பாக்கிய ஷீலா

செல்வன். S. சாலமோன் ஜெபர்சன்

செல்வன். J. ஜெபகுமார்

திரு. P. சாம்சன் பீற்றர்

திரு. M. சற்குணராஜ்

செல்வன். E. வின்ஸ்டன் நோவா

திரு. J.K. பெவின் ஜோசப்

செல்வன். R. டேரீஸ் ஜேக்கின்

திருமதி. A. சுமிதா

செல்வன். J. ஷேரன் ஜோஸ்வா ராஜ்

திரு. Y. ஜாண்சன்

**பிப்ரவரி 20**

செல்வி. J. கிரேஸி அருள் ஜாய்ஸ்

திரு. P. கார்த்திகேயன்

திருமதி. J. நிஷாந்தினி

திரு. K. ஆஸ்லி மனுவேல்

திரு. V. காமராஜ்

திரு. S. ஜேம்ஸ் ஆல்பர்ட்

திரு. C. சாம் சுந்தர்

திரு. J. ஆபிரகாம் ராஜகுமார்

திருமதி. சுதா

செல்வி. R. மெலோடினா

திரு. J. ஜேசுதாஸ் டக்ளஸ்

திரு. S. ஆஷாத் பிரபு

**பிப்ரவரி 21**

செல்வி. J. ஜெனிஃபா

திருமதி. C. திலகராணி

திரு. D.J. ஜான் சாலமோன் மனோகர்

திரு. கிங்ஸ்டன்

திரு. R. ஒநேசி

திருமதி. B. அனிஷா ஜோஷி

திரு. J. ஜோவர்ட்

செல்வன். J. ஜோடன் மேத்யூ

செல்வன். J. ரிச்வின் அபிஷேக்

திருமதி. G. ஜாய் எஸ்தர்

**பிப்ரவரி 22**

திரு. A. செல்வின்

செல்வன். J. ராபர்ட் ஞானராஜ்

திருமதி. J. ஆனந்த ஜோதி

செல்வி. S. ஜாய்ஸ் மெர்லின்

செல்வன். G. சஞ்ஜீவ் காந்த்

திருமதி. K. எப்சிபாய்

செல்வி. J. கிறிஸ்டி சித்ரா

திரு. B. கிருபாகரன் ஜோசப்

திருமதி. N. அந்தோணி சகுந்தலா

**பிப்ரவரி 23**

திருமதி. ஜெபகனி

திரு. J. ஜெயபிரகாசம் தனராஜ் சந்தோஷம்

திரு. P.S. ஆரோன் ராஜா

செல்வன். S. சாலமோன் பிரசாந்த்

திரு. T. ராஜா சாலமோன்

திரு. S. அன்பரசு

திரு. R. அருள்ராஜ் கிறிஸ்துமணி

செல்வி. A. கமலம் ஞானபாய்

திருமதி. P. நெல்சி ஷீபா ஜென்ஸி

திரு. A. டேவிட்

திருமதி. J. கிப்டி பியோனா

செல்வி. D. ஜேஸ்மின்

திரு. T. ஜெபராஜ் ஜெபசிங்

திரு. K.A. ஜேன்மணி

திரு. S. ஹன்ஸ் இம்மானுவேல் ராஜேஷ்

**பிப்ரவரி 24**

செல்வன். G. ஜோயல்ராஜ்

திருமதி. J. சுலோச்சனா காந்தி

திரு. I. தயாளன்

செல்வி. M. ஷேரன் பிரசின்னா

திருமதி. S. ஸ்டெல்லா சாமுவேல்

திரு. S. அல்பர்ட் ஜேக்ஸன் நிதின்

திரு. S. சாமுவேல் மோரிஸ்

செல்வி. S. ரோஷினி எலிசபெத்

செல்வி. S. ரீத்தா ஷிவாணி

திருமதி. D. ஸ்டெஃபி

திரு. J. ஜோசப் சுவாமியடியான்

செல்வன். J. ஜெபஸ் சிபி

**பிப்ரவரி 25**

திருமதி. T. ஜாண்ஸி இசபெல்லா

திரு. D. ஞானராஜா

செல்வி. D. அஜிதா

செல்வி. J. ஜெமிமா ரோஸ்லின்

செல்வன். B. விஜய் பிரசாந்த்

திருமதி. P. ஜெபிட்டா

திரு. P. நெல்சன் ஜாண் ராஜாசிங்

செல்வி. R. ஜாஃபியா ஏஞ்சலின்

**பிப்ரவரி 26**

திரு. D. சுந்தரமணி

செல்வன். N. ஷான் ஃபெலிக்ஸ்

திரு. J. சாமுவேல்

செல்வி. G. லீனா

திருமதி. S. ஜெபஸ்டி

திருமதி. எஸ்தர் ஆனந்த்

திரு. A. விஜயபாண்டி

திருமதி. M. மெர்லின்

திருமதி. J. தனகிருபா

திரு. R. முரளிதரன்

செல்வி. P. சாரா ஜெப ஜோதி

செல்வன். ஸ்டெலின்

செல்வி. G. பிரிசில்லா வின்சி

திருமதி. கலாவதி

திரு. A. சுந்தர்சிங்

**பிப்ரவரி 27**

செல்வன். D. பெனியேல் ரேவன்

செல்வி. A. ஜெனிஷா பிரின்ஸஸ்

திருமதி. A. ரமலா

திருமதி. எஸ்தர் சத்யகலா

திருமதி. J. கலை ஜோதி

செல்வன். A. ஜாண் செல்வின்

திருமதி. S. சிமி

செல்வன். V. ஜோஹன்

செல்வன். A. பொன் ஆர்வின்

செல்வன். J. ஜியோபிரின்

திருமதி. K. ஜெஸிபாய் ஹில்டா

செல்வன். S. சாமுவேல்

திரு. M. சாமுவேல்

**பிப்ரவரி 28**

திருமதி. A. ஜெபசீலி பெர்சியாள்

செல்வி. A. ஜெபினா செல்வி

திருமதி. C. ஆசிர் ராணி

திரு. P.S. பொன் கோயில்பிள்ளை

செல்வி. A. ஷைலின் நிஷா

திரு. J. ஜெயகுமார்

திருமதி. S. கலாவதி

செல்வி. S. ஷேரன் ட்ரஃபீனா

செல்வி. சங்கீதா

திரு. R. ஜாண் சாமுவேல்

திருமதி. S. பிரின்ஸி ஃபெலிக்சன்

கர்த்தர் உங்களை நீடித்த நாட்களாக திருப்தியாக்குவாராக.
உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள்



## திருமண நாளை ஆசரிப்பவர்கள்


| | |
|---|---|
| பிப்ரவரி 1 | Mr. J. ரத்தினராஜ் & Mrs. R. யாமினி நிவேதா |
| | Mr. C. டென்னிஸ் & Mrs. D. சந்திரமணி |
| | Mr. D. ஜெபா தேவ பிரகாஷ் & Mrs. M. அகஸ்டா ஏஞ்சல் |
| பிப்ரவரி 2 | Mr. D. பெரியதுரை & Mrs. P. சுகிர்தா |
| | Mr. A. சௌந்திரபாண்டி டேனியல் & Mrs. P. அன்பு குளோரியா |
| | Mr. T. சாமுவேல்ராஜ் & Mrs. S. கிரேஸ் |
| | Mr. J. ஆண்ட்ரூஸ் & Mrs. A. பியூலா லதா |
| பிப்ரவரி 3 | Mr. J. ஹாப்பர் பிரைட் & Mrs. H. பொன்செல்வி |
| | Mr. E. ஸ்டீபன் ஜோசப் & Mrs. H. ஜெஸிந்தா டேனி தாரா |
| | Mr. A. ஜாண்சன் & Mrs. J. அன்புகரசி |
| | Mr. J. ராஜ்மோகன் செல்வின் & Mrs. Dr. அனிட்டா செல்வின் |
| பிப்ரவரி 4 | Mr. P. தர்மராஜ் & Mrs. D. பிச்சைமணி |
| | Mr. P. பவுல் சுந்தர்ராஜ் & Mrs. P.S. எலிசபெத் |
| | Mr. I. ஜேஸ்கர்ராஜா & Mrs. J. எஸ்தர் |
| | Mr. P. ஹேரிஸ் பீற்றர் & Mrs. S. கல்யாணி |
| | Mr. C.T. அருள் & Mrs. G. தீபா அருள் |
| பிப்ரவரி 5 | Mr. G.S. அசோக சக்கரவர்த்தி & Mrs. காஞ்சனா அசோகர் |
| | Mr. W. ஞானமணி & Mrs. G. பால்நீதி |
| | Mr. C. கிறிஸ்டோபர் & Mrs. C. திலகராணி |
| பிப்ரவரி 6 | Mr. C. ராஜேஸ் இம்மானுவேல் & Mrs. R. திவ்யா |
| | Mr. R. மோசஸ் & Mrs. D. பிளஸ்ஸி |
| | Mr. K. ஜோசப் ராஜ் & Mrs. J. எஸ்தர் கரோலினா |
| பிப்ரவரி 7 | Mr. மோகன்ராஜ் & Mrs. ஜெனிபர் |
| | Mr. A. சுரேஷ்குமார் & Mrs. S. சந்தண கிருபா |
| | Mr. M. சேகர் & Mrs. S. பூமணி |
| பிப்ரவரி 8 | Mr. J. ராபின்சன் & Mrs. A. அற்புத சுகிர்தா |
| | Mr. A. மாணிக்கராஜ் & Mrs. M. செல்வி |
| | Mr. B. ஆதிசேகரன் & Mrs. A. கிரேஸ் |
| | Mr. I. தவமணி சாமுவேல் & Mrs. T. உஷா |
| | Mr. M. சுரேஷ் & Mrs. R. பியர்லின் மெர்சி |
| | Mr. A. பாலையா டேவிட் & Mrs. B. காந்திமதி |
| | Mr. S. கிரிதரன் & Mrs. J. ஸ்டெபி கரோலின் |
| பிப்ரவரி 9 | Mr. K. ஆபிரகாம் & Mrs. A. எஸ்தர் |

| | |
|---|---|
| | Mr. J. ஜார்ஜ் & Mrs. J. மல்லிகா |
| | Mr. தேவசகாயம் & Mrs. D. மரிய ஜேஸ்மின் |
| | Mr. Y. செல்வகுமார் & Mrs. S. முருகேஸ்வரி |
| பிப்ரவரி 10 | Mr. S. செல்வராஜ் சிற்றரசு & Mrs. S. எலிசபெத் |
| | Mr. E.P.R. செல்வராஜ் & Mrs. மக்னோலியா மேரி |
| | Mr. S. சுதந்திரராஜ் & Mrs. S. அன்னபாக்யம் |
| | Mr. A.S.P. மாணிக்கராஜ் & Mrs. M. சாந்தி ஜெபசுந்தரி |
| | Mr. D. சுகேஷ் சாமுவேல் & Mrs. S. வித்யா தேவி |
| பிப்ரவரி 11 | Mr. P. ஞானபிரகாசம் & Mrs. செல்வி |
| | Mr. P. ஜெகநாதன் & Mrs. J. லில்லி |
| | Mr. S. டேனி ரோமன்சிங் & Mrs. G. பிரேமா |
| | Mr. D. சிங்கராஜன் & Mrs. S. ஜெயா அன்னபாய் |
| | Mr. தங்கப்பழம் & Mrs. செல்வி |
| | Mr. K. சாமுவேல் தர்மராஜ் & Mrs. S. எஸ்தர் ராணி |
| பிப்ரவரி 12 | Mr. ஐயப்பன் & Mrs. அருள் ராணி |
| | Mr. J. பரிசுத்தராஜ் & Mrs. P. பட்டுராணி |
| | Mr. கிறிஸ்டோபர் அலெக்ஸ் & Mrs. மெர்லின் |
| | Mr. P. பாஸ்கர் & Mrs. ஜெயக்கனி |
| பிப்ரவரி 13 | Mr. எபனேசர் பால் & Mrs. E. ப்ரீத்தி |
| | Mr. ஜுட்ஸ் சாலமோன்ராஜ் & Mrs. J. ஷீபா |
| பிப்ரவரி 14 | Mr. மனோகர் செல்லப்பா & Mrs. மெர்சி நிர்மலா |
| பிப்ரவரி 15 | Mr. P. ராஜேந்திரன் & Mrs. ஞான ஜெபமணி |
| பிப்ரவரி 16 | Mr. S. அருள்ராஜ் & Mrs. ஃபேனி |
| | Mr. D. ஸ்டாலின் ராஜேந்திரன் & Mrs. S. ஜோதி நட்சத்திரம் |
| பிப்ரவரி 17 | Mr. A. ஜெயராஜ் & Mrs. J. ததேயு ராணி |
| பிப்ரவரி 18 | Mr. P. பொன்ராஜ் & Mrs. அருள்மேரி |
| | Mr. V. ஜோசப் & Mrs. கஸ்தூரி |
| பிப்ரவரி 19 | Mr. V. சாம் பால் டேவிட் & Mrs. S. ஜெனிபர் மங்களராணி |
| | Mr. B. பிரபு & Mrs. சில்வியா பிரபு |
| பிப்ரவரி 20 | Mr. Y. ஜெயகுமார் & Mrs. J. ஜேஸ்மின் |
| பிப்ரவரி 21 | Mr. R. ஒநேசி & Mrs. O. ஜெஸிந்தா |
| | Mr. P. இம்மானுவேல் தினகரன் & Mrs. G. ஸ்டெல்லா தினகரன் |
| | Mr. S. தர்மலிங்கம் & Mrs. D. செந்தூர்கனி |
| பிப்ரவரி 22 | Mr. P.A. ஜவஹர்ராஜ் & Mrs. J. மரியபுஷ்பம் |



| | |
|---|---|
| பிப்ரவரி 23 | Mr. V. ராஜமணி & Mrs. R. பொன்ராணி |
| | Mr. S. அருள்வாசன் & Mrs. A. சத்யபிரியா |
| | Mr. P. அன்புராஜ் & Mrs. ஸ்டெல்லா |
| | Mr. J.S. கிங்ஸ்டன் சாமுவேல்துரை & Mrs. C. பிரசில்லா ஜெயந்தி |
| பிப்ரவரி 26 | Mr. S. பிளஸ்ஸோ தேவ பிரியன் & Mrs. I. ஏஞ்சலின் பிரியா |
| பிப்ரவரி 28 | Mr. R. இன்பராஜ் & Mrs. I. கல்யாணி |

பிறந்த நாள், திருமண நாள் ஆசரிப்போரை கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். அன்றைய தேதிகளில் காலை 5.30 மணி ஆராதனைகளில் உங்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது.
அனைவரும் கலந்து கொண்டு ஆண்டவரின் நிறைவான ஆசீர்வாதத்தை பெறுவீர்களாக.



# பாடல் பிறந்த வரலாறு

## வில்லியம் வால்ஃபோர்டு

**(WILLIAM WALFORD)**

**பாடல் : "என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்"**

**"Sweet hour of Prayer''**

1842ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில், கோல்ஸ்ஹில் என்னுமிடத்தில், வில்லியம் வால்ஃபோர்டு என்னும் கண் பார்வையற்ற போதகர், தமது அறையில் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தார். கண் பார்வை இல்லாததால் அவர் அதிக நேரம் ஜெபத்தில் தரித்திருப்பது வழக்கம். அன்று அவர் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும்போது, அவரது நண்பரான போதகர் தாமஸ் சால்மன் அவரிடம் வந்தார். வந்தவர் யாரென்று தெரிந்தவுடன், வால்ஃபோர்டு அவரிடம், "என் மனதில் ஜெபத்தைக் குறித்த ஒரு பாடல் உருவாகிக் கொண்டிருக்கிறது. நான் சொல்லச் சொல்ல அதை எழுதிக் கொள்ளுங்கள்" எனக்கூறி, வரிவரியாக அதைச் சொல்லவே, போதகர் சால்மன் அதை எழுதிக் கொண்டார். எழுதி முடித்தவுடன் அதைப் படிக்கக் கேட்டு, வால்ஃபோர்டு அவர்கள் அதைச் சரியென ஒத்துக்கொண்டார். இரு ஆண்டுகளுக்குப்பின் சால்மன் போதகர்

அமெரிக்காவில் நியூயார்க் நகருக்குச் சென்றார். அங்கு 1848ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாவதாக இப்பாடல் ஒரு கிறிஸ்தவப் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டது. இப்பாடலைப் பார்த்தவரெல்லாரும் அதைப் பாராட்டினர். சரீரக் கண்கள் பார்வையற்றிருந்தாலும், தனது ஆத்துமக் கண்களின் மூலம் ஜெபத்தின் வல்லமையை உணர்ந்ததால், வால்ஃபோர்டு அவர்களால் இப்பாடலை எழுத முடிந்தது. வில்லியம் பிராட்பரி என்னும் சங்கீத நிபுணர் இப்பாடலுக்கு ஓர் அழகிய இராகத்தை அமைத்தார். இதுவே நாம் இப்போது இப்பாடலுக்கு உபயோகிக்கும் இராகமாகும்.

இப்பாடலை எழுதிய வில்லியம் வால்ஃபோர்டு அவர்கள் 1800 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தார். இளவயதில் மிகவும் ஏழையாயிருந்தார். சிறுவனாயிருக்கும்போது விளையாட்டுச் சாதனங்களைச் செய்து விற்று வாழ்க்கை நடத்தி வந்தார். அடிக்கடி பண நெருக்கடிகளும் மற்றும் பல கவலையான நிலைமைகளும் அவரைத் துன்புறுத்தின. அச்சமயங்களில் அவர் ஆண்டவரின் பாதத்தில் வெகுநேரம் ஜெபத்தில் தரித்திருந்து, தன் கவலைகள் நீங்கப் பெற்றார். இவ்விதமாக அதிகமான ஆத்மீக அனுபவம் அவருக்குக் கிடைத்தது. கண்பார்வையற்றிருந்தாலும், அடிக்கடி ஆலய ஆராதனைகளில் அருளுரை ஆற்ற அவர் அழைக்கப்பட்டார். பல ஆண்டுகளுக்குப்பின், அவர் போதகராக அபிஷேகம் பெற்று, சில சபைகளில் திருப்பணியாற்றினார்.

அவர் 1875ஆம் ஆண்டு தமது எழுபத்தைந்தாம் வயதில் காலமானார்.

**ஜனவரி மாதம் நமது ஆலயத்தில்**
**திருமண பந்தத்தில் இணைந்த புதுமணத் தம்பதி**

27.1.2023 திரு. J. ப்ளசிங் ஸ்டீவ் & திருமதி. S. ஸ்வீட்லின் மெர்ஸி

திருமண பந்தத்தில் இணைந்த இப்புதுமண தம்பதிகளை வாழ்த்துகின்றோம். இவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து, வையகத்தில் எல்லா சீருடனும், சிறப்புடனும், எல்லாச் செல்வங்களும் பெற்று வாழ ஜெபிப்போம்.



# லெந்துகால கூட்டங்கள் 2023

| | | |
|---|---|---|
| 22.2.23 | **சாம்பற்புதன்** | |
| | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | காலை 8.00 மணி | **தேவ கோபாக்கினைக் கூறல்**<br>*தலைப்பு :* மனந்திரும்புதலுக்கான அழைப்பு |
| | காலை 10.30 மணி | **உபவாச ஜெபம்**<br>*செய்தி :* சகோ. **பிரபாகரன் பெனடிக்ட்**<br>தூத்துக்குடி |
| | மாலை 6.30 மணி | **குணமளிக்கும் ஆராதனை** |
| 23.2.23<br>வியாழன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* ஆவியில் எளிமை<br>மத் 5:3 (லூக்கா 18:9-14) |
| | காலை 6.30 மணி | லித்தானியா ஆராதனை |
| 24.2.23<br>வெள்ளி | காலை 5.30 மணி | **புனித மத்தியாவின் திருநாள்**<br>திருவிருந்து ஆராதனை |
| | மதியம் 12.00 மணி | **மன்றாட்டு ஜெபம்** |
| | மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* உபவாசத்தால் பரலோக நன்மை –<br>நெகேமியா (நெகே 1:4) |
| 25.2.23<br>சனி | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* சாந்தகுணம்<br>மத் 5:5 (மத் 11:25-30) |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி :* சகோ. **கரிஷ்மா ஜெபக்குமார்**<br>தூத்துக்குடி |
| 26.2.23<br>ஞாயிறு | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு :* தூய்மையாக்கும் கிறிஸ்து<br>(ஏசாயா 58:8) |
| | காலை 7.00 மணி | திருவிருந்து ஆராதனை |
| | காலை 9.00 மணி | காலை ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி :* சகோ. **கரிஷ்மா ஜெபக்குமார்**<br>தூத்துக்குடி |

| | | |
|---|---|---|
| 27.2.23<br>திங்கள் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : இரக்கம்<br>மத் 5:7 (மத் 18:21-35) |
| | மாலை 6.30 மணி | ஜெப ஆராதனை |
| 28.2.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : இருதயத்தில் தூய்மை<br>மத் 5:8 (மாற்கு 7:20-23) |
| | மாலை 6.30 மணி | வேத ஆராய்ச்சி கூடுகை |
| 1.3.23<br>புதன் | காலை 5.00 மணி | வாக்குத்தத்த திருவிருந்து ஆராதனை |
| | மாலை6.30 மணி | குணமளிக்கும் ஆராதனை |
| 2.3.23<br>வியாழன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : சமாதானம் பண்ணுதல்<br>மத் 5:9 (1கொரி 9:16-27) |
| | மாலை 6.30 மணி | லித்தானியா ஆராதனை |
| 3.3.23<br>வெள்ளி | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : நீதியின் நிமித்தம் துன்பத்தை அனுபவித்தல்<br>மத் 5:10 (வெளி 7:9-17) |
| | மதியம் 12.00 மணி | மன்றாட்டு ஜெபம் |
| | மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : உபவாசத்தால் பரலோக நன்மை – யோசபாத் (2 நாளா 20:3) |
| 4.3.23<br>சனி | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : பூமிக்கு உப்பாயிருத்தல்<br>மத் 5:13 (யோவான் 3:22-36) |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : **அருள்திரு. டேவிட்,** கோயம்புத்தூர் |
| 5.3.23<br>ஞாயிறு | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : மன்னிக்கும் கிறிஸ்து<br>(சங் 25:11) |
| | காலை 7.00 மணி | திருவிருந்து ஆராதனை |
| | காலை 9.00 மணி | காலை ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : **அருள்திரு. டேவிட்,** கோயம்புத்தூர் |



| | | |
|---|---|---|
| 6.3.23<br>திங்கள் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : உலகத்திற்கு வெளிச்சமாயிருத்தல்<br>மத் 5:14 (யோவான் 12:35-50) |
| | மாலை 6.30 மணி | ஜெப ஆராதனை |
| 7.3.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : உயர்ந்த நீதியுள்ளவர்களாயிருத்தல்<br>மத் 5:20 (மத் 23:1-39) |
| | மாலை 6.30 மணி | வேத ஆராய்ச்சி கூடுகை |
| 8.3.23<br>புதன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : வீண் கோபம் கொள்ளாதிருத்தல்<br>மத் 5:22 (ஆதி 4:1-16) |
| | மாலை 6.30 மணி | குணமளிக்கும் ஆராதனை |
| 9.3.23<br>வியாழன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : ஒப்புரவாகுதல்<br>மத் 5:24 (ஆதி 33:1-15, மத் 5:23-26) |
| | மாலை 6.30 மணி | லித்தானியா ஆராதனை |
| 10.3.23<br>வெள்ளி | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : இச்சையடக்கமுள்ளவர்களாயிருத்தல்<br>மத் 5:29,30 (1கொரி 9:24-27) |
| | மதியம் 12.00 மணி | மன்றாட்டு ஜெபம் |
| | மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : உபவாசத்தால் பரலோக நன்மை – தானியேல் (தானி 9:3) |
| 11.3.23<br>சனி | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : பரிசுத்தமான குடும்ப வாழ்க்கை<br>மத் 5:32 (மாற்கு 10:1-10) |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : **அருள்திரு. குணகுமார்,** சென்னை |
| 12.3.23<br>ஞாயிறு | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து<br>ஓசியா 2:19(பி) |
| | காலை 7.00 மணி | காலை ஆராதனை |
| | காலை 9.00 மணி | திருவிருந்து ஆராதனை |

| | | |
|---|---|---|
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : **அருள்திரு. குணகுமார்,** சென்னை |
| 13.3.23<br>திங்கள் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **வாக்கு பிறழாமை**<br>**மத் 5:37 (நீதி 12:22)**<br>**ஜெப ஆராதனை** |
| 14.3.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **தீமையை நன்மையினால் வெல்லுதல்**<br>**மத் 5:39 (ஆதி 50:15-21)**<br>**வேத ஆராய்ச்சி கூடுகை** |
| 15.3.23<br>புதன் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **இரண்டு மைல் தூரம் செல்லுதல்**<br>**மத் 5:39 (லூக்கா 19:1-10)**<br>**குணமளிக்கும் ஆராதனை** |
| 16.3.23<br>வியாழன் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **உற்சாகமாக கொடுத்தல்**<br>**மத் 5:42 (2கொரி 9:1-12)**<br>லித்தானியா ஆராதனை |
| 17.3.23<br><br>வெள்ளி | காலை 5.30 மணி<br><br><br>மதியம் 12.00 மணி<br>மாலை 6.30 மணி | **தூய பேட்ரிக்ஸ் தினம்**<br>திருவிருந்து ஆராதனை<br>(காலை உணவு வழங்கப்படும்)<br>**மன்றாட்டு ஜெபம்**<br>திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : உபவாசத்தால் பரலோக நன்மை –<br>**இயேசு (மத் 4:2)** |
| 18.3.23<br>சனி | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **பூரண சற்குணராயிருத்தல்**<br>**மத் 5:48 (மத்தேயு 5:43-48)**<br>**லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : **சகோ. ராஜன்** I.R.S., சென்னை |



| | | |
|---|---|---|
| 19.3.23<br>ஞாயிறு | காலை 5.30 மணி<br><br><br>காலை 7.00 மணி<br>காலை 9.00 மணி<br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **விடுவிக்கும் கிறிஸ்து**<br>**(யாத் 3:8)**<br>திருவிருந்து ஆராதனை<br>காலை ஆராதனை<br>**லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : **சகோ. ராஜன்** I.R.S., சென்னை |
| 20.3.23<br>திங்கள் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **உயரிய நோக்குடன் தானதர்மம் செய்தல்**<br>**மத் 6:1 (மத் 6:1-4)**<br>**ஜெப ஆராதனை** |
| 21.3.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **மாய்மாலமற்ற ஜெபம் செய்தல்**<br>**மத் 6:6 (மத் 5:5-8)**<br>**வேத ஆராய்ச்சி கூடுகை** |
| 22.3.23<br>புதன் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **கர்த்தர் கற்பித்தபடி ஜெபித்தல்**<br>**மத் 6:9-13 (மத் 7:7-11)**<br>**குணமளிக்கும் ஆராதனை** |
| 23.3.23<br>வியாழன் | காலை 5.30 மணி<br><br><br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **மாய்மாலமற்ற உபவாசம் செய்தல்**<br>**மத் 6:17 (மத் 4:2)**<br>**லித்தானியா ஆராதனை** |
| 24.3.23<br>வெள்ளி | காலை 5.30 மணி<br><br><br>மதியம் 12.00 மணி<br>மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **விண்ணுலகில் செல்வத்தை சேமித்தல்**<br>**மத் 6:20 (மத்தேயு 6:19-21)**<br>**மன்றாட்டு ஜெபம்**<br>திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : உபவாசத்தால் பரலோக நன்மை –<br>**கொர்நேலியு (அப் 10:30)** |
| 25.3.23<br>சனி | காலை 5.30 மணி<br><br>மாலை 6.30 மணி | **புனித மரியாள் மங்கள வாக்குத் திருநாள்**<br>திருவிருந்து ஆராதனை<br>**லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : சகோதரி. **சகுந்தலா அசரியா**<br>ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 26.3.23<br>ஞாயிறு | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : அடிமைத்தன அமைப்பை மறுவுருவாக்குதல் (எபே 2:7) |
| | காலை 7.00 மணி | திருவிருந்து ஆராதனை |
| | காலை 9.00 மணி | காலை ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : சகோதரி. **சகுந்தலா அசரியா**<br>ஆலங்குளம் |
| 27.3.23<br>திங்கள் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : ஆவிக்குரிய தெளிவான பார்வையுடையவர்களாய் இருத்தல்<br>மத் 6:22 (மத் 6:22-27) |
| | மாலை 6.30 மணி | **ஜெப ஆராதனை** |
| 28.3.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : கர்த்தருக்கே உண்மையாய் ஊழியம் செய்தல்<br>மத் 6:24 (யோவா 21:15-21) |
| | மாலை 6.30 மணி | **வேத ஆராய்ச்சி கூடுகை** |
| 29.3.23<br>புதன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : வீண் கவலை கொள்ளாதிருத்தல் - I<br>வீண் கவலையினால் உண்டாகும் தீமைகள்<br>மத் 6:31-32 (மத் 6:25-34) |
| | மாலை 6.30 மணி | **குணமளிக்கும் ஆராதனை** |
| 30.3.23<br>வியாழன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : வீண் கவலை கொள்ளாதிருத்தல் - II<br>வீண் கவலைப்படுகிறோம்<br>மத் 6:31-32 (மத் 6:25,34) |
| | மாலை 6.30 மணி | **லித்தானியா ஆராதனை** |
| 31.3.23<br>வெள்ளி | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : தேவனுக்குரியவைகளுக்கு முதலிடம் கொடுத்தல்<br>மத் 6:33 (ஆதி 6:1-7) |
| | மதியம் 12.00 மணி | மன்றாட்டு ஜெபம் |
| | மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : உபவாசத்தால் பரலோக நன்மை – பவுல் (2 கொரி 6:5) |



| | | |
|---|---|---|
| 1.4.23<br>சனி | காலை 5.00 மணி | வாக்குத்தத்த திருவிருந்து ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : சகோ. **K. பட்டுராஜ் செல்வன்**<br>தூத்துக்குடி |
| 2.4.23<br>ஞாயிறு | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : கிறிஸ்து சமாதான ராஜா (சங் 24:7) |
| | காலை 7.00 மணி | காலை ஆராதனை |
| | காலை 9.00 மணி | **குருத்தோலை பவனி** |
| | காலை 9.30 மணி | திருவிருந்து ஆராதனை |
| | மாலை 6.30 மணி | **லெந்துகால கன்வென்ஷன் கூட்டம்**<br>*செய்தி* : சகோ. **K. பட்டுராஜ் செல்வன்**<br>தூத்துக்குடி |
| 3.4.23<br>திங்கள் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : அத்திமரத்தை சபித்தல் தேவாலயத்தை சுத்திகரித்தல் (மத் 21:12-22) |
| | மாலை 6.30 மணி | **பரிசுத்த வார கூட்டம்**<br>*செய்தி* :<br>சகோ. **J. இம்மானுவேல் கோயில்ராஜ்**<br>அந்தமான் |
| 4.4.23<br>செவ்வாய் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : கேள்வி நாள் (மத் 21:23-46) |
| | மாலை 6.30 மணி | **பரிசுத்த வார கூட்டம்**<br>*செய்தி* :<br>சகோ. **J. இம்மானுவேல் கோயில்ராஜ்**<br>அந்தமான் |
| 5.4.23<br>புதன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : தைலாபிஷேக நாள் (மாற் 14:1-11) |
| | மாலை 6.30 மணி | **பரிசுத்த வார கூட்டம்**<br>*செய்தி* :<br>சகோ. **J. இம்மானுவேல் கோயில்ராஜ்**<br>அந்தமான் |

| | | |
|---|---|---|
| 6.4.23 கட்டளை வியாழன் | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை – **கட்டளை வியாழன்** |
| | மாலை 6.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>*தலைப்பு* : **கிறிஸ்து : வாழ்வு தரும் அப்பம் (1 கொரி 11:24)** |
| 7.4.23 புனித வெள்ளி | காலை 5.30 மணி | திருவிருந்து ஆராதனை (முன்பாகம்) |
| | காலை 11.30 மணி | **மும்மணி தியான ஆராதனை**<br>(சுய வெறுப்பு உண்டியல் படைக்கவும்) |
| 8.4.23 சனி | காலை 5.30 மணி | காலை ஆராதனை |
| | காலை 8.00 மணி | **ஏழை எளியோருக்கு அரிசி வழங்குதல்** |
| 9.4.23 ஞாயிறு | அதிகாலை 3.00 மணி | **கிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகை & திருவிருந்து ஆராதனை**<br>*தலைப்பு* : **உயிர்த்தெழுந்த இயேசுவுக்குள் வாழ்வை கொண்டாடுதல் (1 கொரி 15:52)** |
| | காலை 9.00 மணி | திருவிருந்து ஆராதனை |
| | காலை 11.00 மணி | **ஞானஸ்நான ஆராதனை** |
| | மாலை 6.30 மணி | **இன்னிசை நிகழ்ச்சி**<br>சகோ. **J. ஜெகத் ரட்சகர்**<br>**இன்னிசை குழு,** சண்முகபுரம் |

**சபையார் அனைவரும்**
**நமது தூய பேட்ரிக் இணைபேராலயத்தில் நடைபெறும்**
**அனைத்து நிகழ்ச்சிகளையும்**
**தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கவும்,**
**தாங்கள் குடும்பத்துடன் பங்குபெற்று**
**தேவஆசீர்வாதம் பெற்று செல்லும்படி**
**அன்புடன் அழைக்கிறோம்.**

| | |
|---|---|
| திரு. K. எபனேசர் சாம் | Rev. M. காலேப் மேன்சிங் |
| திரு. D. செல்வராஜ் | Rev. R.A.J. செல்வின் துரை |
| சபை ஊழியர்கள் | திருப்பணிவிடையாளர்கள் |



## சங்கிலித் தொடர் ஜெபம் மற்றும் உபவாச ஜெபம்

அன்பிற்குரியவர்களே, நமது ஆலயத்தில் சங்கிலித்தொடர் ஜெபம் இந்த மாதம் முதல் தொடங்கப்படுகிறது. காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை வெள்ளிக்கிழமைகளில் நடைபெற இருக்கிறது. நம் தேசத்திற்காக, அரசியல் தலைவர்களுக்காக, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக, திருச்சபை எழுப்புதலுக்காக, தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கு தேவன் விசேஷித்த ஞானம் தருவதற்காக, திருச்சபையில் நடைபெறும் ஊழியங்களுக்காக, திருச்சபை ஊழியர்களுக்காக, நம்முடைய திருமண்டலத்திற்காக, திருச்சபையில் வியாதியில் இருப்பவர்களுக்காக, லெந்து காலத்தில் நடைபெறும் ஊழியங்களுக்காக , நமது மாநிலத்துக்காக, மாவட்டத்திற்காக இன்னும் அநேக ஜெபக்குறிப்புகளுக்காக ஜெபிக்க நாம் ஆயத்தப்படுவோம். இந்த ஜெபக்குழுவிலே கலந்து கொண்டு ஜெபிக்க விருப்பம் உள்ளவர்கள் எங்களுக்கு தெரியப்படுத்தவும், நாங்கள் உங்களுக்கான கால நேரங்களை ஆயத்தப்படுத்த வசதியாய் இருக்கும். மேலும் நமது திருச்சபையில் மாதாந்திர உபவாச ஜெபம் நடைபெற இருக்கிறது. இந்த உபவாசக் கூடுகையில் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தேவநாமத்தை மகிமைப்படுத்த அன்புடன் அழைக்கிறோம். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

## சுவிசேஷ ஊழியம்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இந்த ஆண்டு முதல் நமது தூய பேட்ரிக் இணைப்பேராலயத்தின் மூலம் மாதாந்திர சுவிசேஷ ஊழியம் மேற்கொள்ள இருக்கிறோம். நமது தூத்துக்குடியில் உள்ள தாளமுத்துநகர் மற்றும் கோமஸ்புரம் அதனைச் சேர்ந்த மற்ற பகுதிகளில் மாதத்திற்கு ஒருமுறை மாலை நேரத்தில் சுவிசேஷ ஊழியமாக செல்ல பிரயாசப்படுகிறோம். இந்த சுவிசேஷ ஊழியத்திற்காக அனைவரும் தவறால் ஜெபியுங்கள். காலம் சமீபமாயிருப்பதினால் சுவிசேஷம் அறிவிப்பது நமது பணி, ஆகவே சபை மக்கள் அனைவரும் இந்த சுவிசேஷ ஊழியத்தில் தவறாமல் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம். “ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனை

பிதாவானவர் கனம் பண்ணுவார்'' (யோவான் 12:26) என்ற வார்த்தையின்படி நாம் அனைவரும் ஒன்றிணைந்து சுவிசேஷ ஊழியம் செய்ய அன்புடன் அழைக்கிறோம்.

**Rev. M. காலேப் மேன்சிங்**

**Rev. R.A.J. செல்வின் துரை**

## ஜனவரி மாதம் ஞானஸ்நானம் பெற்றவர்கள்

**குழந்தைகள் ஞானஸ்நானம்**

08.01.2023 H. ஜோஹர் லிபின்

09.01.2023 M. டாப்னி பிரின்சஸ்

**இளமைப் பருவங் கடந்தவர்கள் ஞானஸ்நானம்**

15.01.2023 S. அந்தோணிராஜ்

ஞானஸ்நானத்தின் மூலம் திருச்சபையில் இணைந்திருக்கும் இவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம். நல்ல மேய்ப்பனான தேவன்தாமே இவர்களை ஜீவிய காலமெல்லாம் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, நன்மையி னாலும், கிருபையினாலும் முடிசூட்டும்படி ஜெபிப்போம்.

# விஷ்வவாணி

## சிறப்பு கன்வென்ஷன் கூட்டங்கள் 2023

**நாள் : பிப்ரவரி 18 & 19 (சனி & ஞாயிறு)**

**மாலை 6.30 மணி**

*தேவசெய்தி :*

**சகோ. ஹேரிஸ் பிரேம்**

விஷ்வவாணி, மீடியா



*இன்னிசையுடன்*
*மிஷனெரி தரிசன பாடல்கள்*
*மற்றும் பணித்தள படக்காட்சிகள்*

***யாவரையும் குடும்பமாக பங்குபெற அன்புடன் அழைக்கிறோம்.***



*மறக்க முடியாத மாமனிதர்கள்*

# கனம் ஜேம்ஸ் ஹாப்

*(The Rev. James Haph)*

(கி.பி. 1789 – 1847)

கனம் ஜேம்ஸ் ஹாப் 1789ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள கம்பர்லாந்து நாட்டில் பிறந்தார். இவர் கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலையில் படித்து, எம்.ஏ. பட்டம் பெற்று பின்பு வேத சாஸ்திரம் கற்றார். 1874ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14ஆம் தேதி கார்லையிலில் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டு, தாம் பிறந்து வளர்ந்த கம்பர்லாந்து பகுதியிலுள்ள குரின்ஸ்டேல் என்னுமிடத்தில் குருவாகப் பணியாற்றினார். சபை குருவாக இருக்கும்பொழுது அவர் மிஷனெரி வாழ்வையே சிறந்ததாகக் கருதினார். மிஷனெரி ஊழியத்தைக் காட்டிலும் சிறந்ததோர் வேலை வேறில்லையென்று கருதியவர் கனம் ஹாப்.

“இந்தியாவில் கிறிஸ்துவை அறியாமல் வாழும் மக்களுக்கு அவரின் அன்பைக் குறித்து தெரிவிக்க என் உள்ளம் துடிக்கிறது” அதற்கு தமக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டுமென்று அனுதினமும் கடவுளை வேண்டிக்கொண்டு, அந்த நாளை எதிர்நோக்கியவராகவே அவர் தம் குருத்துவ பணியைச் செய்து வந்தார். 1816ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கனம் ஹாப் தம்முடைய மனைவியுடன் கப்பலேறி, இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு சென்னைப் பட்டிணம் வந்து சேர்ந்தார்.

1816ஆம் வருடம் நவம்பர் மாதம் 2ஆம் தேதி பாளையங் கோட்டைக்கு வந்தார்கள். அப்பொழுது திருநெல்வேலி மாவட்டத்திலிருந்த கிறிஸ்தவ மக்கள் ஒரு இருள் சூழ்ந்த நிலைமையிலிருந்தார்கள். திருநெல்வேலியிலுள்ள கிறிஸ்தவ மக்கள் ஆதரவற்று, தங்களுடைய நம்பிக்கையையிழந்து பின்வாங்கிப்போகும் நிலைமையிலிருந்தார்கள். துவக்கத்தில் கவலைக்கும் தொல்லைக்கும் உள்ளான கனம் ஹாப் சுவிசேஷப்பணி மூலம் ஆறுதலும், இன்பமும் பெற்றார்.

1820ஆம் ஆண்டு இறுதியில் கனம் ஹாப் திருவாங்கூர் பகுதியில்

சி.எம்.எஸ். செய்துவரும் வேலையைப் பார்க்க விரும்பி பாளையங்கோட்டையை விட்டுப் புறப்பட்டார். அங்குள்ள கிறிஸ்தவ மக்களைச் சந்தித்து, ஆலயங்களில் பிரசங்கம் செய்தார். பிற்காலச் சரித்திரத்தைப் பார்க்கும்பொழுது, அவ்விடங்களைப் பார்வையிட்டு அவைகளின் நிலைமையை அவர் அறிந்துகொண்டது, அங்குள்ள சபை மக்களுக்குப் பயன் தருவதாயிருந்தது என்று கூறலாம்.

சுற்றுப் பிரயாணத்தை முடித்துத் திரும்பிப் பாளையங்கோட்டைக்கு வந்த சில நாட்களில், தலைச்சேரி ஆலயத்தை இடித்துப் போடும்படி அரசாங்கத்தார் உத்திரவிட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் அவ்வாறு உத்திரவிட்டிருக்கிறார்களென்று ஹாப் அறிந்து, அவர்களுக்கு எழுதி, தாம் அக்கோயிலைப் பார்த்து இருப்பதாகவும், அது அங்கு குடியிருந்த ஐரோப்பியருக்கும், புதிதாகத் கிறிஸ்தவ சமயத்தை தழுவியிருந்த இந்திய மக்களுக்கு தேவையென்றும் எழுதினார். அதன் பேரில் அவ்வுத்தரவு ரத்து செய்யப்பட்டது. ஆலயமும் பாதுகாக்கப்பட்டது.

பல்வேறு வகைகளில் திருநெல்வேலி மாவட்டத்திலும், திருவாங்கூரிலும் கிறிஸ்தவ மக்களுக்குச் சிறந்த சேவை செய்து வந்த கனம் ஹாப் 1921ஆம் ஆண்டு சென்னையிலிருந்து பதினைந்து மைல் தூரத்திலிருக்கும் பூந்தமல்லிக்கு மாற்றப்பட்டார். இதையறிந்த திருநெல்வேலி மாவட்ட கிறிஸ்தவ மக்கள் வருத்தமடைந்தனர். அவர் தங்களை விட்டுப் பிரிந்து செல்வதை நினைத்துக் கண்ணீர் வடித்தனர்.

## பூந்தமல்லியிலும் உதகமண்டலத்திலும் அவர் செய்த ஊழியம்

பூந்தமல்லியில் ஆயிரம் போர்வீரர்கள் தங்கக்கூடிய விடுதியும், ஒரு பெரிய மருத்துவ நிலையமும், இரண்டு ஆங்கிலப் பள்ளிக் கூடங்களுமிருந்தன. சுற்றுப்புறங்களிலிருந்த கிராமங்களில் கிறிஸ்தவர்கள் குடியிருந்தார்கள், அவர்களுடைய ஆத்மநலனைக் கவனிக்க எவருமில்லாமலிருக்க ஹாப் கண்டு, உடனடியாக அவர்களுக்கென்று ஒரு உபதேசியாரை நியமித்தார். அவர் சிதறியிருந்த அம்மக்களை அவர்களுடைய வீடுகளில் சந்தித்தார். அவர்கள் ஒரு இடத்தில் கூடி கிறிஸ்து பெருமானை வழிபடுவதற்கென்று ஒரு ஆலயத்தையும் ஹாப் கட்டினார்.



பாளையங்கோட்டையை விட்டுப் புறப்படுமுன் புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்க்கும்படி வேதாகமச் சங்கம் அவரைக் கேட்டுக் கொண்டது. பூந்தமல்லி வந்து சேர்ந்தவுடன் அந்த வேலையை ஆரம்பித்து, ஒரு தமிழ் அகராதி எழுதவும் முற்பட்டார். அயராத உழைப்பினால் தம்முடைய உடல் நலம் கெட்டு வருவதை ஹாப் உணர்ந்தார். ஒன்பது மாதங்களே பூந்தமல்லியிலிருந்து அதன் பின்பு தம் தாய்நாடு செல்ல ஹாப் முடிவு செய்தார்.

## கனம் ஹாப்பின் பிற்காலப்பணி

தம்முடைய வாழ்நாட்களில் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் பயன்படுத்தப் பழகியிருந்தவர் கனம் ஹாப் தம்முடைய முதுமைக் காலத்தில் "இந்தியாவில் கிறிஸ்தவச் சமயத்தின் சரித்திரம்" என்ற தலைப்பில் ஒவ்வொன்றும் 400 பக்கங்களுக்கு மேல் அடங்கிய நான்கு புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டார். அப்புத்தகங்கள் விற்பனையானதால் கிடைக்கும் லாபத்தை உடல்நலம் குன்றிப் பணிசெய்ய இயலாமல் தவிக்கும் மிஷனெரிகளின் நலனுக்காக ஒதுக்கி வைத்தார். இப்புத்தகங்கள் ஒரு கலைக்களஞ்சியமாகவும், கிறிஸ்தவச் சபையின் பொக்கிஷமுமாகவும் கருதப்பட்டு வருகின்றன. அநேக எழுத்தாளர்கள் கிறிஸ்தவ சபைச் சரித்திரத்தை எழுதும்பொழுது, இப்புத்தகங்களையே அடிப்படையாகக் கொண்டு எழுதி வருகின்றனர்.

இவர் 1832ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சர்ரே பகுதியிலுள்ள ஹாம் சபைக்கு குருவாக நியமிக்கப்பட்டார். அதில் பதினாறு ஆண்டுகள் சிறந்த ஊழியம் செய்து, அச்சபை மக்களின் அன்பிற்குப் பாத்திரமானவராக நடந்து கொண்டார். அவருடைய உடல் முதுமைத் துன்பத்தால் நலிந்து தளர்ந்து, குளிர்காலத்தைச் செலவிடும்படி ஹேஸ்டிங்ஸில் அவர் சென்றிருந்தபொழுது, 1847ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் தேதியன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர் கடைசியாகக் கூறிய வார்த்தைகள், "விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறேன்" (1பேதுரு 1:5) என்பவைகளே.

என் நாமத்தின் நிமித்தம்
ஒரு கலசம் தண்ணீர்
கொடுத்தாலும்
நூறத்தனையாய் திரும்பத் தருவேன்.

# CARE

## கிறிஸ்மஸ் கீத பவனி

நமது சபையின் அமைப்பின் மூலமாய் கடந்த 2022 நவம்பர் 16 முதல் டிசம்பர் 22 வரை சபையின் தன்னார்வத் தொண்டர்கள், சபை ஊழியர்கள் கமிட்டி அங்கத்தினர்கள் மற்றும் குருவானவர்கள், சபையின் அனைத்து வீடுகளையும் கிறிஸ்மஸ் தாத்தாவுடன் சேர்ந்து CARE அமைப்பின் மூலம் கிறிஸ்மஸ் கீதபவனியாக சென்று சந்தித்தனர். அதில் வரும் தொகையில் ஒரு பகுதியை கொண்டு சபையின் 137 குடும்பங்களுக்கு கிறிஸ்மஸ் வெகுமதிகள் (புதிய ஆடைகள், அரிசி, பலகாரங்கள்) வழங்கப்பட்டன. கீதபவனியில் கலந்து கொண்டவர்களுக்கு உற்சாகப்படுத்தி இரவு உணவு வழங்கிய கீழ்க்கண்டவர்களையும் வாழ்த்தி நன்றி கூறி ஜெபிக்கிறோம்.

Mr. V. ஜாண் வாசக்
Mr. K.S. ஜெயபால்
Mr. T. பீட்டர் ஜோஷ்வா
Mr. எட்வின் மங்களபாண்டி
Mr. S. ஆனந்தராஜ்
Mr. I. தாமஸ்
Mrs. C. ஹில்டா ராபின்சன்
Dr. T.A. மஞ்சுளா
Mr. T. சாமுவேல்ராஜ்
Mr. ஜேசன்
Mr. D. தனசிங்
Mrs. ரெஜினா காமராஜ்
Mr. P. ஜெயபாலன்
Mr. E. தங்கராஜன் டக்ளஸ்
Mr. B. கிருபாகரன் ஜோசப்
Mr. வேல்சாமி
Selvan. C. ஜெரேமியா கிறிஸ்டோபர்
Mr. S. ராஜ்குமார்
Mr. J. ஜாண் ஆபிரகாம்
Mr. R. பிரபாகரன் பால்
Mr. S. ராஜசேகர்
M/s. ராஜாமணி நைட்கிளப்
Mr. J. ஜாண் நெல்சன்



## சுவிசேஷ ஊழியத்திற்கு இரவு உபசரணை செய்த குடும்பத்தினர்

திரு. V.P. ராபின்சன் அவர்கள் மற்றும் குடும்பத்தினர் சுவிசேஷ ஊழியத்திற்கு உணவு வழங்கியுள்ளார்கள். நமது திருச்சபையின் சார்பாக அவர்கள் குடும்பத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பாடகர் குழுவிற்கு உபசரணை செய்த குடும்பத்தினர்

திரு. K. ஜெசுபாலன் தாமஸ் அவர்கள் மற்றும் குடும்பத்தினர் பாடகர் குழுவின் உணவுக்காக உதவியுள்ளார்கள். நமது திருச்சபையின் சார்பாக அவர்கள் குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஏழைகளுக்கு அரிசி வழங்கியவர்கள்

திருமதி. கமலா
திருமதி. ஏஞ்சல்
திரு. J. ஹாப்பர் பிரைட்
திருமதி. ஜாய் சோபிதராஜ்
திரு. S. ஜாண் தனதுரை
திருமதி. ஜெபி பெர்சியா
திரு. அரிஸ் ராஜாசிங்
திரு. J. செல்வின் பால் பீட்டர்
திரு. R. பர்னபாஸ் நியூமேன்
திரு. W. ஸ்டாலின்
திரு. S. ஜெயகுமார்
திரு. J. ஜோசப்
M/s. பால் நர்சரி ஸ்கூல்
திரு. V.P. ராபின்சன்
திரு. N. ஜெபராஜ்
திரு. E. பிச்சைமணி
திரு. S. ராஜ்குமார்

மேற்கண்ட குடும்பத்திற்கு திருச்சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஜனவரி மாதம் இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்கள்

09.01.2023 திருமதி. S. தங்கம்
13.01.2023 செல்வி J. தர்ஷினி (8 வயது)

கர்த்தருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்களின் பிரிவினால் வாடும் குடும்பத்தின் பிள்ளைகளுக்கு தேவன்தாமே சமாதானத்தையும் ஆறுதலையும் அருளிச் செய்வாராக.

பிப்ரவரி 2023

# வேதாகமத்திலிருந்து கேள்விகள்



## (மத்தேயு)

1. பரலோகத்தில் நாம் யாரைப் போல் இருப்போம்?
2. யாரை பரலோகத்திலிருக்கிற பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் என்று இயேசு கூறுகிறார்?
3. எங்குள்ள ஜனங்கள் இருளிலிருந்து பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்?
4. பரலோகராஜ்யத்தில் பெரியவனாய் இருப்பது யார் என்று இயேசு கூறுகிறார்?
5. யாருடைய இருதயம் கொழுத்திருக்கிறது?
6. எதைச் செய்வது நியாயப்பிரமானமும், தீர்க்கதரிசனமுமாகும்?
7. யாருடைய செய்கையின்படி செய்யக்கூடாது?
8. எந்தப் பாவம் மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை?
9. பூரண சற்குணராயிருக்கிற பிதாவைப்போல் இருக்க நாம் செய்ய வேண்டியது என்ன?
10. நித்திய ஜீவனை அடையும்படி யார் போவார்கள்?
11. எதைக் கற்றுக்கொள்ளும்படி போங்கள் என்று இயேசு கூறினார்?
12. தூற்றுக்கூடை யார் கையில் இருக்கிறது?
13. பரிசுத்தவான்களின் கல்லறை எப்பொழுது திறக்கப்பட்டது?
14. புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்பதின் அர்த்தம் என்ன?
15. நியாயத்தீர்ப்பு நாளில் எதைக் குறித்து கணக்கொப்புவிக்க வேண்டும்?

குறிப்புகள் :

1. A4 பேப்பரில் விடைகளை எழுத வேண்டும்.
2. **ஒரு கேள்விக்கு இரு வகையான பதில்கள் இருந்தால் அந்த கேள்விக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட மாட்டாது.**
3. **வசனத்தை அப்படியே எழுதக்கூடாது, விடைகளை மாத்திரம் எழுத வேண்டும்.**
4. இருப்பிடம் கட்டாயம் எழுத வேண்டும்.
5. 15ம் தேதிக்குள் விடைத்தாள்களை வேதவினா பெட்டியில் போட வேண்டும்



# ஜனவரி மாத பதில்கள்

ஆகாய்
சகரியா
மல்கியா

| | | |
|---|---|---|
| 1. | ஆசாரியன் | – மல்கியா 2:7 |
| 2. | ஆலயத்தை கட்டுவதில் | – ஆகாய் 1:8 |
| 3. | பிரகாசமும், மப்புமாயிருக்கும் | – சகரியா 14:6 |
| 4. | யோசுவாவுக்கு | – சகரியா 3:1 |
| 5. | வார்த்தையை கேளாதபடியினால் | – சகரியா 7:2 |
| 6. | செருபாபேலை | – ஆகாய் 2:23 |
| 7. | தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவார்கள் | – சகரியா 6:15 |
| 8. | சகரியா 2:8 | |
| 9. | ஆண்டவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் | – சகரியா 4:14 |
| 10. | கர்த்தரின் பந்தியை அற்பமானது என்று சொல்லும்போது | – மல்கியா 1:12 |
| 11. | நீங்கள் எனக்கென்று தானா உபவாசம் பண்ணினீர்கள் | – சகரியா 7:5,6 |
| 12. | வார்த்தை அனுப்பப்பட்ட ஜனங்களோடு இருக்கிறேன் | – ஆகாய் 1:13 |
| 13. | ஆவியினாலே ஆகும் | – சகரியா 4:6 |
| 14. | சிவப்புக் குதிரையின் மேல் ஏறியிருந்த ஒரு புருஷன் | – சகரியா 1:8 |
| 15. | என் ஜனமாவார்கள் | – சகரியா 2:11 |

## ஜனவரி மாதம் வேதாகம புதிர் சரியான விடை எழுதியவர்கள்

திரு. D. காட்வின் ஆண்ட்ரூஸ்
திரு. J. முத்துமாணிக்கம் ஆபிரகாம்
திரு. K. சாலமோன் ராஜா
திருமதி. குமாரி தாமஸ்
திருமதி. விமலா ஜெயகுமார்
திருமதி. பெல்சன் துரைராஜ்
திருமதி. விஜயா ஜெபராஜ்
திருமதி. மல்லிகா
திருமதி. ராணி இன்பராஜன்
திருமதி. சாந்தா ஜூலியன்
திருமதி. ரெஜினா கோயில்மணி
திருமதி. ஐ. குளோரி
திருமதி. லதா ஜாண்சன்
திருமதி. சாந்தி ஜாண்
திருமதி. ஞான ஜெயராணி
திருமதி. ஃபிரிடா ஹென்றி
திருமதி. ஆதிசிரோன்மணி ஞானதீபம்
திருமதி. சரோஜா ஜெபகுமார்
திருமதி. செலினா ஜெயபால்
திருமதி. கஸ்தூரி தமிழரசன்
திருமதி. ஜோதி ஜெயராஜ்
திருமதி. காஞ்சனா அசோகர்
திருமதி. T. எஸ்கிளின்
திருமதி. A. புஷ்பராணி
திருமதி. C. சரோஜினி சந்திரன்
திருமதி. C. கிறிஸ்டி செல்வமணி
திருமதி. D. எலிசபெத் நோவா
திருமதி. E. பியூலா எபநேசர்
திருமதி. J. மாலதி போர்டு
திருமதி. J. பத்மா ஜெபராஜ்
திருமதி. J. ஞான கிருபா விக்டோரியா
திருமதி. J. லில்லி ஜெகநாதன்
திருமதி. K. விக்டோரியா கனகராஜ்
திருமதி. M. ஞானபாய்
திருமதி. N. ஜான்சிராணி தாமஸ்
திருமதி. N. அன்பு இன்பராஜ்
திருமதி. P. மரினாள் சுகந்தி
திருமதி. P. லலிதா
திருமதி. R. ஜெபராணி ரவிலாரன்ஸ்
திருமதி. S. பரிபூரண பாக்கியவதி
திருமதி. S. திலகராணி

ஒரு வருடத்தில் வேதாகமத்தை வாசித்து முடிக்க வேண்டிய முறைமை
தினசரி இதன்படி வாசித்து தேவாசீர்வாதம் பெற கேட்டுக் கொள்கிறோம்.

## பிப்ரவரி

| | | | |
|---|---|---|---|
| 1 | சங்கீதம் 32 | லூக்கா 12-13 | யாத்திராகமம் 13-14 |
| 2 | சங்கீதம் 33 | லூக்கா 14-15 | யாத்திராகமம் 15-16 |
| 3 | சங்கீதம் 34 | லூக்கா 16-17 | யாத்திராகமம் 17-18 |
| 4 | சங்கீதம் 35 | லூக்கா 18-19 | யாத்திராகமம் 19-20 |
| 5 | சங்கீதம் 36 | லூக்கா 20-21 | யாத்திராகமம் 21-22 |
| 6 | சங்கீதம் 37 | லூக்கா 22 | யாத்திராகமம் 23-24 |
| 7 | சங்கீதம் 38 | லூக்கா 23-24 | யாத்திராகமம் 25-26 |
| 8 | சங்கீதம் 39 | யோவான் 1-2 | யாத்திராகமம் 27-28 |
| 9 | சங்கீதம் 40 | யோவான் 3-4 | யாத்திராகமம் 29-30 |
| 10 | சங்கீதம் 41 | யோவான் 5 | யாத்திராகமம் 31-32 |
| 11 | சங்கீதம் 42 | யோவான் 6 | யாத்திராகமம் 33-34 |
| 12 | சங்கீதம் 43 | யோவான் 7-8 | யாத்திராகமம் 35-36 |
| 13 | சங்கீதம் 44 | யோவான் 9-10 | யாத்திராகமம் 37-38 |
| 14 | சங்கீதம் 45 | யோவான் 11-12 | யாத்திராகமம் 39-40 |
| 15 | சங்கீதம் 46 | யோவான் 13-14 | லேவியராகமம் 1-2 |
| 16 | சங்கீதம் 47 | யோவான் 15-16 | லேவியராகமம் 3-4 |
| 17 | சங்கீதம் 48 | யோவான் 17-18 | லேவியராகமம் 5-6 |
| 18 | சங்கீதம் 49 | யோவான் 19-20 | லேவியராகமம் 7-8 |
| 19 | சங்கீதம் 50 | யோவான் 21 | லேவியராகமம் 9-10 |
| 20 | சங்கீதம் 51 | அப். 1-2 | லேவியராகமம் 11-12 |
| 21 | சங்கீதம் 52 | அப். 3-4 | லேவியராகமம் 13-14 |
| 22 | சங்கீதம் 53 | அப். 5-6 | லேவியராகமம் 15-16 |
| 23 | சங்கீதம் 54 | அப். 7-8 | லேவியராகமம் 17-18 |
| 24 | சங்கீதம் 55 | அப். 9-10 | லேவியராகமம் 19-20 |
| 25 | சங்கீதம் 56 | அப். 11-12 | லேவியராகமம் 21-22 |
| 26 | சங்கீதம் 57 | அப். 13-14 | லேவியராகமம் 23-24 |
| 27 | சங்கீதம் 58 | அப். 15-16 | லேவியராகமம் 25-26 |
| 28 | சங். 59,23 | அப். 17-18, மத்.5-6 | லேவியராகமம் 27, 1கொரிந்தியர் 13 |



தூத்துக்குடி சேகரம்

## 2022 டிசம்பர் மாத வரவு செலவு கணக்கு

### வரவு

| | |
|---|---|
| Opening Balance | 18,55,941.79 |
| குருமார் சங்கம் | 1,581.00 |
| திருமண்டல அலுவலக ஊழியர் சங்கம் | 5,126.00 |
| திருமண்டல ஸ்தாபன வளர்ச்சி நிதி | 3,185.00 |
| பேராய அலுவலக சங்கம் | 1,028.00 |
| பெண்கள் ஐக்கிய சங்கம் | 352.00 |
| கோயில் காணிக்கை | 55,674.00 |
| பரி. நற்கருணை காணிக்கை | 1,88,376.00 |
| ஸ்தோத்திர காணிக்கை | 1,48,210.00 |
| பலவித காணிக்கை | 2,070.00 |
| சங்கக் காணிக்கை - சபை | 1,73,415.00 |
| சங்கக் காணிக்கை - ஊழியர் | 21,618.00 |
| சுவிசேஷ ஊழியம் | 3,000.00 |
| திருமணம் | 69,396.00 |
| ஞானஸ்நானம் | 8,832.00 |
| தசமபாகம் | 72,595.00 |
| தீப காணிக்கை | 3,415.00 |
| Banns Fees | 2,500.00 |
| ஏலம் | 2,900.00 |
| House Visit T.O. | 36,500.00 |
| பரி. பேட்ரிக் வேதாகம நிலையம் | 2,970.00 |
| பலவித வரவுகள் | 9,500.00 |
| சிறுவர் ஆராதனை காணிக்கை | 6,201.00 |
| மிஷெனரி காணிக்கை | 4,650.00 |
| ஆலய அலங்கரிப்பு காணிக்கை | 4400.00 |
| Bank Interest | 1,221.00 |
| மொத்தம் | 26,84,656.79 |

### செலவு

| | | |
|---|---|---|
| சேகர வீதாச்சாரம் | | 2,96,400.00 |
| குருமார் அலவன்ஸ் | | 13,940.00 |
| உபதேசிமார் | | 28,000.00 |
| ஆலய பணியாட்கள | | 1,24,690.00 |
| பரி. நற்கருணை | | 975.00 |
| எழுத்தர் | | 29,937.00 |
| அச்சுக்கூலி | | 19,736.00 |
| பழுது மற்றும் பராமரிப்பு பணி | | 53,984.00 |
| திருமண்டல ஆண்கள் கீத ஆராதனை | | 6,685.00 |
| தொலைபேசி கட்டணம் | | 3,527.00 |
| விக்டோரியா பிரைமரி வேன் அட்வான்ஸ் | | 8,500.00 |
| கிறிஸ்மஸ் செலவுகள் | | 15,950.00 |
| கீத ஆராதனை உபசரணை | | 62,690.00 |
| ஆண்டு நிறைவு ஸ்தோத்திர ஆராதனை | | 6,635.00 |
| ஓய்வுநாள் பாடசாலை கிறிஸ்மஸ் நிகழ்ச்சி | | 20,484.00 |
| ஆலய தேவைகள் | | 21,952.00 |
| பாடகர் குழு | | 16,059.00 |
| Cup Server & Catechist அங்கி | | 44,640.00 |
| உபசரணை | | 22,800.00 |
| மரியா ஆடியோ அட்வான்ஸ் | | 32,750.00 |
| பரி. பேட்ரிக் வேதாகம நிலையம் | | 1,680.00 |
| ஆலய வளாகம் மணல் | | 19,400.00 |
| Gold Medal (SSLC, +2 Rank Holders) | | 70,000.00 |
| ஆலய அலங்கரிப்பு | | 3,972.00 |
| Bank Charges | | 118.00 |
| Closing Balance | Cash 12,315.00 | |
| | Bank 2,49,508.40 | |
| | Dio. 14,97,329.39 | 17,59,152.79 |
| மொத்தம் | | 26,84,656.79 |

**Rev. R.A.J. Selwyn Durai**
Pastorate Chairman

**Mr. P. Jebasingh**
Pastorate Treasurer

E & O E